நாள் 30-08-2023

M SUNIL RAJA Digitally signed by M SUNIL RAJA Date: 2023.08.30 16:45:34 +0530

OS No. 69 / 2020

**வா.சா. 1, திருமதி. ஹபிப் நிஷா**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. உங்கள் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட மொத்த இடத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 7 ½ (ஏழரை) சென்ட் ஆகும். அதில் 4 ¼ (நான்கே கால்) சென்ட் அளவுள்ள இடத்தை உங்களது சகோதரியான இந்த வழக்கின் பிரதிவாதி ரஹிமால் பேகத்திற்கு எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால் ஆமாம். மீதமுள்ள 3 ¼ (மூன்றேகால்) சென்ட் அளவுள்ள இடத்தை தான் உங்களுக்கும், உங்கள் தங்கைக்கும் உங்களது தாயார் எழுதி வைத்துள்ளார் என்றால் ஆமாம். அவ்வாறு எழுதி வாங்கிய பின்னர் யார் முதலில் வீடு கட்டினார்கள் என்றால் எனது தங்கையான பிரதிவாதி தான் கட்டினார். மேற்படி எழுதி வாங்கிய பின்னர் எப்போது நீங்கள் வீடு கட்டினீர்கள் என்றால் ஏற்பாடு ஆவணம் எழுதி வாங்கி 10 ஆண்டுகள் நான் பழைய வீட்டிலேயே தான் இருந்தேன். தற்போது புதிதாக கட்டியுள்ள வீட்டிற்கு வரைபட அனுமதி வாங்கி தான் கட்டியுள்ளேன். உங்களுக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட கடையின் வழியாகத்தான் நீங்கள் தற்போது நடந்து சென்று வருகிறீர்கள் என்றால் ஆமாம். நடைபாதையில் மறித்து அவர்கள் கட்டி விட்டதால் நான் அவ்வாறு நடந்து சென்று வருகிறேன். நீங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பே உங்கள் வீட்டை கட்டி முடித்துவிட்டு தான் இந்த வழக்கை தாக்கல் செய்தீர்கள் என்றால் இல்லை. வீட்டு வேலை நடந்து கொண்டிருக்கும்போது இந்த வழக்கை தாக்கல் செய்தேன்.

2. உங்களது வீட்டிற்கும், கடைக்கும் ஒரே மின்சார இணைப்பு தான் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் வீடு கட்டியதற்கு பின்னர் வீட்டிற்கும், கடைக்கும் ஒரே மின்சார இணைப்பு எடுத்துள்ளேன். அதற்கு முன்பு கடைக்கு வேறு மின்சார இணைப்பு இருந்தது. எனது அப்பாவும், அம்மாவும் 10 வருடங்களாக என்னுடன் இருந்தார்கள். தற்போது இந்த வழக்கு போட்டதால் பிரதிவாதி அவர்களை கூப்பிட்டு வைத்துக்

கொண்டார். உங்களுக்கு எழுதிக் கொடுக்கப்பட்டுள்ள ஏற்பாடு ஆவணத்தில் கடைசிவரை உங்கள் அப்பாவையும், அம்மாவையும் நீங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று உள்ளது என்றால் ஆமாம். நான் தற்போதும் அவர்களை பார்த்துக் கொள்ள தயாராக உள்ளேன். ஏற்பாடு ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள பாதை அந்த ஆவணம் எழுதப்பட்ட சமயத்தில் பாதையாக இல்லை என்றால் சரியல்ல. பாதியாக தான் இருந்தது. நான் நடந்து பயன்படுத்தி உள்ளேன். உங்கள் அப்பாவும், அம்மாவும் இருக்கும் அறையின் வழியாகத்தான் நீங்கள் பாதை கேட்கிறீர்கள் என்றால் வீட்டிற்குரிய பாதை அதில்தான் உள்ளது. அதைத்தான் மறித்து அவர்கள் கட்டி, அப்பாவை தங்க வைத்துள்ளார்கள். நீங்கள் 10 வருடங்களாக பழைய வீட்டில் இருந்ததாக கூறியுள்ளீர்கள். அவ்வாறு பழைய வீடு இருக்கும்போதே தற்போது உங்கள் அப்பா, அம்மா குடியிருக்கும் அறை இருந்தது என்றால் ஆமாம்.

3. உங்கள் வீட்டிற்கு கீழ் பக்கம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட முடுக்கு உள்ளது என்றால் ஆமாம். மேற்படி முடுக்கை நோக்கி நீங்கள் வாசல் எதுவும் போடவில்லை என்றால் வீட்டை உடைக்கும் போது நடைபாதை விட்டுத் தருவதாக சொன்னதால் அதுவரை நாங்கள் மேற்படி முடுக்கின் வழியாகத்தான் நடந்து வந்தோம். மேற்படி முடுக்கின் வழியாக நீங்கள் வீடு கட்டும்போது எந்த படியோ அல்லது வாசலோ போடவில்லை என்றால் நாங்கள் அவ்வாறு போட்டதைத்தான் அவர்கள் மறித்து கட்டி உள்ளார்கள். உங்களுக்கு உங்கள் அம்மா எழுதிக் கொடுத்த இடம் முழுவதிலும் நீங்கள் வீட்டை கட்டி விட்டீர்கள் என்றால் ஆமாம். உங்கள் அப்பா, அம்மா இருக்கும் அறையின் ஒரு பகுதியில் வாசல் போடுவதற்காக நீங்கள் அறையை இடித்தீர்கள் என்றால் இல்லை. நீங்கள் தற்போது நடைபாதை கேட்பது உங்கள் அப்பா, அம்மா இருக்கும் அறையின் வழியாகத்தான் என்றால் ஆமாம். எனக்கு நடைபாதை தரக்கூடாது என்பதற்காகத்தான் அவர்கள் அதனை ஒரு ரூம் போல் மாற்றி எனது அப்பா, அம்மாவை அதில் வைத்துள்ளார்கள்.

4. நீங்கள் கேட்டுள்ளவாறு உங்கள் அப்பா அம்மா இருக்கும் அறையை உடைத்து வெளியே வந்தாலும் தலைவாசல் வழியாகத்தான் மீ.கா. தெருவிற்கு செல்ல முடியும் என்றால் இல்லை. எனது வீட்டிலிருந்து வெளியே வந்தாலே மீ.கா. தெரு தான்.

மேற்படி உங்கள் அப்பா, அம்மா இருந்த அறையை நீங்கள் உடைத்து விட்டீர்கள் என்றால் இல்லை. பிரதிவாதி தான் அவ்வாறு ஹாலோ பிளாக் வைத்து அடைத்துள்ளார். உங்கள் வீட்டில் இருந்து வெளியே வந்தாலும், உங்கள் அப்பா அம்மா இருக்கும் அறையின் மற்றொரு பகுதியையும் இடித்தால் தான் ரோட்டிற்கு செல்ல முடியும் என்றால் அவர்கள் அவ்வாறுதான் அந்தப் பகுதியையும் மறைத்து கட்டி உள்ளார்கள். உங்கள் பழைய வீட்டிலிருக்கும் போது வீட்டிற்கு ஒரு முற்றமும், முன்புறமாக ஒரு அறையும் இருந்தது என்றால் சரிதான். நீங்கள் புதிதாக வீடு கட்டிக்கொண்டு இருந்தபோதே கடையின் வழியாகத்தான் நடந்து வருகிறீர்கள் என்றால் ஆமாம். அப்போதே மறித்து விட்டதால் நாங்கள் கடையின் வழியாகத்தான் நடந்து வீட்டு வேலைகளையும் பார்த்தோம்.

5. வீட்டு வேலை நடந்து கொண்டிருந்தபோதே பிரதிவாதி தலைவாசலை அடைத்துவிட்டார். உங்களது ஆவணத்தில் 70 சதுர அடி நடைபாதை என குறிப்பிடப்பட்டுள்ளது உங்களுக்கும், பிரதிவாதிக்கும் பொதுவானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அந்த இடம் பொதுவானது தான். அது போல் தளத்தில் எந்த பாதையும் இல்லை என்றால் அவர்களது கஸ்டடியில் இருந்ததால் அதனை அவர்கள் அடைத்து விட்டார்கள். நீங்களும், பிரதிவாதியும் ஆவணத்தில் உள்ளவாறு உங்கள் இடங்களை பயன்படுத்தவில்லை என்றால் நான் எனது பத்திரப்படி உள்ள இடத்தை தான் பயன்படுத்துகிறேன். எனது ஆவணத்தில் எல்லா எல்கைகளும் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நீங்கள் பழைய வீடு இருக்கும்போது முன்பு இருந்த முற்றத்தில் வீடு கட்டாமல் இருந்திருந்தால் நீங்களும், பிரதிவாதியும் அந்த இடம் வழியாக பொது நடைபாதையாக பயன்படுத்தி இருக்கலாம் என்றால் ஆமாம். ஆனால், எனக்கு நடைபாதை தருவதாக தான் அவர்கள் சொன்னார்கள். நீங்களும், பிரதிவாதியும் தலைவாசலை நடைபாதையாக பயன்படுத்த வேண்டும் என்று தான் ஆவணம் எழுதப்பட்டது என்றால் ஆமாம். நீங்கள் ஆவணத்திற்கு விரோதமாக கட்சி செய்கிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் வேண்டுமென்றே இந்த வழக்கை வம்பாக

**தாக்கல் செய்துள்ளீர்கள் என்றும், அதனால் நீங்கள் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும், தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.**

திறந்த நீதி மன்றத்தில் சாட்சி என் முன்பாக சாட்சியம் அளித்து தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பிக்கபட்டு சரி என சாட்சியால் ஒப்பு கொண்டு கையொப்பம் செய்யப்பட்டது.

ஓம்/—எம்.சுனில் ராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்
செங்கோட்டை

- True Copy -

(sd/-S.M., Typist)